உமறுப்புலவர்
தமிழ்மொழி நிலையம்
UMAR PULAVAR TAMIL LANGUAGE CENTRE

# இந்திய நிகழ்த்துகலை வகுப்புகள் 2026

அன்புமிகு பெற்றோருக்கு,

வணக்கம்! உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம் தேசிய தமிழ்மொழி வளமையமாகச் செயல்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் கல்வி அமைச்சின் நிதியாதரவுடன் இந்திய நிகழ்த்துகலை வகுப்புகளை நடத்தி வருகின்றது. **இந்த ஆண்டு நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின், சிலம்பம், பறை, கபடி என ஏழு கலை வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன**. ஆர்வமுள்ள மாணவர்கள் இவ்வகுப்புகளில் பங்கேற்றுப் பயன் பெறலாம்.

❖ **விரைவுத்தகவல் குறியீட்டை நிகழ்த்துகலை வகுப்புகளில் இன்றே பதிந்திடுவீர்!**

**நோக்கம்:**

- இந்தியப் பாரம்பரியக் கலைகளைக் கற்பித்தல்
- மாணவர்களின் படைப்பாக்கத் திறனை வளர்த்தல்
- கலை நயங்களை இரசிக்க மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல்
- பள்ளி நிகழ்ச்சிகளிலும் வெளிப்புற நிகழ்ச்சிகளிலும் ஈடுபடும் வாய்ப்பினை மாணவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தல்

**வகுப்புகள் விவரம்:**

| | |
|---|---|
| **பங்குபெறுவோர்** | தொடக்கநிலை 3 முதல் தொடக்கக் கல்லூரி 2 வரை பயிலும் மாணவர்கள் |
| **கட்டணம்** | கல்வியமைச்சின் நிதியாதரவு (கட்டணமில்லை) |

**பயிற்சிகள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:**

| எண் | தேதி | நேரம் (9.30am - 11.30am) |
|---|---|---|
| **தவணை - 1** | | |
| 1 | 10/01/2026 | நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின் சிலம்பம், பறை, கபடி |
| 2 | 17/01/2026 | |
| 3 | 24/01/2026 | |
| 4 | 31/01/2026 | |
| 5 | 07/02/2026 | |
| 6 | 14/02/2026 | |
| 7 | 21/02/2026 | |
| 8 | 28/02/2026 | |
| 9 | 07/03/2026 | |
| **தவணை - 2** | | |
| 10 | 28/03/2026 | நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின் சிலம்பம், பறை, கபடி |
| 11 | 04/04/2026 | |
| 12 | 18/04/2026 | |
| 13 | 25/04/2026 | |
| 14 | 02/05/2026 | |
| 15 | 09/05/2026 | |
| 16 | 16/05/2026 | |
| 17 | 23/05/2026 | |
| **தவணை - 3** | | |
| 18 | 04/07/2026 | நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின் சிலம்பம், பறை, கபடி |
| 19 | 11/07/2026 | |
| 20 | 18/07/2026 | |
| 21 | 15/08/2026 | |
| 22 | 22/08/2026 | |
| 23 | 29/08/2026 | |
| **தவணை - 4** | | |
| 24 | 19/09/2026 | நடனம், வாய்ப்பாட்டு, வீணை, வயலின் சிலம்பம், பறை, கபடி |
| 25 | 26/09/2026 | |
| 26 | 03/10/2026 | |
| 27 | 10/10/2026 | |
| 28 | 17/10/2026 | |
| 29 | 24/10/2026 | |
| 30 | 31/10/2026 | |

**மாணவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை**

- மாணவர்கள் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிலும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும்.
- வகுப்பில் கலந்துகொள்ள இயலாத மாணவர்கள் முன்னரே அதற்கான காரணத்தை ஆசிரியர்களிடம் தெரிவிக்க வேண்டும்.
- மாணவர்கள் வீட்டு உடையில் வருவதைத் தவிர்த்துப் பொருத்தமான பாரம்பரிய உடையை அணிந்துவர வேண்டும்.
- பயிற்சி நடைபெறும்போது நிகழ்ச்சியை மாணவர்கள் பதிவுசெய்யவோ, புகைப்படம் எடுக்கவோ கூடாது.
- ஒவ்வொரு வகுப்பிலும் பயிலும் மாணவர்கள் குறைந்தது ஒரு நிகழ்ச்சியிலாவது பங்கேற்க வேண்டும். அதற்கு வருகைப்பதிவு அவசியம்.

இவ்வாய்ப்பை நழுவவிடாமல், மாணவர்கள் பயன்பெறும்வண்ணம் பெற்றோர்கள் செயற்படுவீர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். பெற்றோர்களின் ஒத்துழைப்பிற்கு நன்றி!

இப்படிக்கு

இந்திய நிகழ்த்துகலை குழு
தொலைபேசி எண்: 62980781
உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்